# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல் 30 யாழ்ப்பாணம் மே 1999


# தந்தையிடம் செல்லும் வழி எது?

ஆசிரியர்


"எழுந்து என் பிதாவிடம் செல்வேன்" என்ற சுலோகம் (1999) தந்தையின் ஆண்டின் விருதுவாக்கியமாக எடுக்கப்பட்டுள்ளது. கோவில்களிலும் குருமனைகளிலும் பொது இடங்களிலும் பதாதைகளிலும், சுவரொட்டிகளிலும் காணப்படுகிறது. பிதாவுக்கான செபமும் சில இடங்களில் சொல்லப்படுகிறது. மறையேடுகளிலும் சஞ்சிகைகளிலும் இதுபற்றி பரவலாக எழுதப்படுகிறது. இவற்றின் மத்தியில் பிதாவிடம் எப்படிச் செல்வது என்ற கேள்வி எழுகின்றது. தோமையாரே முதலில் சர்ச்சையை எழுப்பினார். "ஆண்டவரே நீர் செல்லுமிடமே எங்களுக்குத் தெரியாதிருக்க, அங்கே போகும் வழி எப்படித் தெரியும்?"

(யோவான் 14:5)

வழியும் தெரியாமல், முடிவும் அறியாமல் திகைத்து திண்டாடிய சீடருக்கு யேசுவை அறிதலே, பிதாவிடம் செல்லும் வழி என்பது தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. அவ்வழி மலைப் பொழிவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதை கிறிஸ்தவ துறவிகள் எடுக்கும் மூன்று வாக்குத்தத்தங்கள் அமைச்சல், விரத்தத்துவம், ஏழ்மை என சுருக்குகிறது. இவை துறவறத்தினருக்கு மட்டுமல்ல, எல்லாப் பொது நிலையினருக்குமே விடுக்கப்பட்டுள்ள அழைப்பாகும். இதனால் பிதாவின் இவ்வாண்டில் அவரிடம் செல்வோருக்கு மும்மணிகளாக முன்வைக்கவேண்டிய மூன்று வழிகள் ஏழ்மை, தூய்மை, தாழ்மை எனலாம்.

யேசுவின் நசரேத் வாழ்வு அனுபவப் பணி, ஏழ்மையுடன் வாழ்ந்து நடாத்தப்பட்டது. வயலின் லில்லிகளோடும், உழுது பயிரிடும் ஏழை விவசாயிகளோடும். திராட்சை தோட்டத்தில் நாட்கூலி செய்யும் வேலையாட்களுடனும், ஏழைக் கைம்பெண்ணின் மனநிறைவான பொற்காசின் கண்டுபிடிப்புடனும் காணாமற் போன ஆடுகளைத் தேடி அலையும் ஏழை மேய்ப்பர்களுடனும் ஒன்றிணைந்தது.



பகிரங்கப்பணி நேரத்திலும் ஏழ்மைப்பணி மாறவில்லை. அது கானாவின் கட்டுமட்டான திருமணத்தின் திராட்சை இரசம் தீர்ந்துவிட்ட சங்கடம், மதிய உணவுக்குப் பணமின்றி வயலின் கதிர்களைப் பிடுங்கி கையில் கசக்கி வாயில் போடும் பட்டினிச் சீடர் குழு, 5000 பேருக்கு உணவளிக்கத் திண்டாடும் அப்போஸ்தலர் கூட்டம், நரிகளுக்கு வளைகளும், குருவிகளுக்கு கூடுகளுமிருக்க தங்குமிட வசதியின்றி அலையும் யேசு சீடர் கூட்டம், வயல் வெளிகள், வள்ளங்கள், கடற்கரைகள், மீன் வலைகள், அவற்றைப் பழுதுபார்க்கும் மீனவர் குடும்பங்கள், தொடர்ந்து சுங்கத்துறையில் நிற்கும் ஆயக்காரன் லேவி, அவர் உற்றார், உறவினர், அவர்களின் ஏழ்மை மிக்க விருந்துகள், ஏழ்மைத் தொழிலாளிகள் பாட்டாளிகளுடனான தோழமையை எண்பிக்கின்றன. ஏழ்மை வாழ்வு இல்லாமல் பிதாவின் வீட்டுக்குச் செல்ல இயலாது. "ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கே உரியது" (மத் 5:3) வரும் 3ம் மிலேனியத்தில் ஏழைப் பங்காளரே இறை அரசின் யாத்திரிகர்களாக இருப்பர். பணக்காரன் அவ்வரசில் நுழைவது கடினமாயிருக்கும் என யேசு அறிவிக்கவில்லையா? புவி மயமாக்கப்பட்ட பொருளாதார சுவர்க்கத்தின் பட்டாடை அணிந்து தினம் விருந்துபசார கேளிக்கைகளிலீடுபடுவோர் பந்தியில் அமரமுடியாத துர்அதிஷ்டசாலிகள்.

இறை அரசின் பந்தியில் பங்குபற்றும் அழைப்பு பெறுபவர் தூய உள்ளம் படைத்தவர்களாய். இவ்வுலக ஆசைகளில் பற்றுத்துறந்தோர்; செம்மறியின் இரத்தத்தினால் உலக தோஷங்களைக் கழுவிக் களைந்து தூய உள்ளம் படைத்தோர்; உலக ஆசைகளை வேரறுத்து, காமக் கண்களால் வாழ்வை நோக்காது, தூய தரிசனமாக எல்லாவற்றிலும் படைத்தவரின் சாயலையும் கைவண்ணத்தையும் கண்டு மகிழ்வோர்.

"தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளை காண்பர். (மத்தேயு 5.8)

காருணையம், சுயநலமற்ற உறவு, சேவை, அன்பு கொண்டு நாளாந்தம் 1 கொரிந்தியர் 13ல் புனித சின்னப்பர் தரும் அன்பின் கீதத்தைப் பாடி வாழ்வோர்; உலகில் பெரும்பான்மையினரின் பெருமைகளை ஏற்றுக்கொள்ளாது, இறைவாக்குக்கும் இறைவிருப்புக்கும் பணிந்துவாழ்வோர்; இவர்கள் பாரதீக கவிஞனின் கவிதையின்படி

(8ம் பக்கம் பார்க்க)

# தூமியும் தூளியும்



◆ புனிதர் பட்டம் கொடுக்கும் முறை கத்தோலிக்க திருச்சபையில் 10ம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. திருத்தந்தையருக்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பம் காரணமாக 973 இல் இறந்த உல்றிச் என்ற ஆக்ஸ்பேர்க் ஆயருக்கு திருத்தந்தை 15ம் யோவானால் 993ல் இடம்பெற்ற லத்தரன் பொதுச் சங்கத்தில் முதன் முதலாக புனிதர் பட்டம் கொடுக்கும் சடங்கு நடைபெற்றது. திருத்தந்தை 3ம் அலெக்ஸ்சாண்டரால் திரு ஆட்சிப்பீடத்திறுக்கு உரியதாக ஒதுக்கப்பட்டு திருத்தந்தை 9ம் கிரகோரியினால் (1227-41) பொதுச்சட்டமாக்கப்பட்டது.

◆ புனிதர் பட்டம் கொடுக்கும் முறை 4 படிமுறைகளைக் கொண்டது. 1) தரவுகளை சேகரித்தல் 2) அறிமுகப்படுத்தல் 3) திருத்தூதுவ நடைமுறைக்கு சமர்ப்பித்தல் 4) இறுதி தீர்ப்பு. முதல் படிமுறை எந்த மறைவட்டத்தில் தொடர்பு உண்டோ அந்த ஆயரின் நிர்வாகத்திற்கு உட்பட்டது. இறுதியான மூன்று படிமுறையும் திருத்தந்தையினதும் வழிபாடுகளுக்கான பேராயத்தினதும் நேரடியான கண்காணிப்பில் இருக்கும். திருத்தந்தை 8ம் ஊர்பான் பின்னர் 14 வது பெனடிக்ட் ஆகியோரின் சட்ட மூலகங்களால் 1917ல் திருச்சபை பொதுச் சட்டமாக அறிவிக்கப்பட்டது.

◆ கத்தோலிக்க திருச்சபையில் புனிதர் பட்டத்துக்கான தொடர்முறையில் சாத்தானின் சட்டத்தரணி (ஆங்கிலத்தில் Devil's Advocate) என்ற பாத்திரம் 15ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் திருத்தந்தை 10 வது லீயோவால் அறிமுகப்படுத்தப்பட்டது. அவரது பணி ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட புனிதரின் வாழ்வு புதுமைகள் பற்றிய தரவுகளை ஆய்வு செய்வதாகும். பேராயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளுக்கு புனிதர் பட்டத்திற்கு எதிராக எல்லா மட்டத்திலும் கேள்விகளை முன்வைப்பார். இதனால் சாத்தானின் சட்டத்தரணி என அழைக்கப்படுகிறார். 1537ல் திருத்தந்தை 5ம் சிக்ஸ்டஸ் உத்தியோகபூர்வமாக உருவாக்கினார்.

◆ திருச்சபையின் தொடக்கத்தில் விரிவான அர்த்தத்தில் கிறிஸ்தவர்கள் அனைவரையும் குறித்தது. பாவிலு கொரிந்தியருக்கு எழுதிய முதலாவது கடிதம் அதிகாரம் 1 வசனம் 31ல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (2 கொரி 7) 1 கிறிஸ்தவர்கள் அனைவரும் புனிதர்கள் என்ற விரிவான அர்த்தம் உரோமை அரசில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தேவகலாபனை இடம்பெற்ற போது வேதசாட்சிகளுக்கு உரியதாக மாற்றம் அடைந்தது.

◆ உரோமைக் கலாபனையின் போது வேத சாட்சிகளாக மரித்தவர்களின் சடலங்கள் இரவுவேளைகளில் அப்புறப்படுத்தப்பட்டு கல்லறைக் குகைகளில் அடக்கப்பட்டது. அச் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டபோது அவரது பெயரை புனிதர் எனக் குறிப்பிட்டு எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என கல்லறை வாயிலில் எழுதப்பட்டது. புனிதர்களின் ஐக்கிய பிரயோசனத்தை விசுவாசிக்கின்றேன் என்ற விசுவாச உண்மை நிசயா விசுவாசப் பிரமாணத்தில் முன்வைக்கப்பட்டது.

◆ புனிதர்களின் வணக்கம் விக்கிரக ஆராதனை, சிலை வழிபாடு என சீர் திருத்த சபையினர் கூறுவதுண்டு. புனிதர்களின் அதீத வணக்கம் விமர்சிக்கக்கூடியதே. இந்த குற்றச்சாட்டு இன்று ஏற்பட்ட ஒன்றல்ல. 1714ம் ஆண்டில் கோவைக்குருக்களில் ஒருவரான யாக்கோமோ கொன்சலஸ் அறங்கோட்டை அரண்மனையில் பிரஞ்சுப்பதிதனோடு நடாத்திய விவாதம் விவிலிய அடிப்படையில் புனிதர் வணக்கத்தை தெளிவுபடுத்திற்று. சுவாமி ஜெயசீலன் எழுதிய யாழ் திருச்சபை வரலாறு எனும் நூலில் 63ம் பக்கத்தில் காணக்கிடக்கிறது.

## கடந்த மாத வினாக்களின் விடைகட்காக பரிசு பெறுபவர்

ப. இ. அனிற்றா லொறெற்
78, கதிட்ரல் வீதி, யாழ்.

[8 ம் பக்கம் பார்க்க]

## வினாக்கள்

1. வேதசாட்சிகளின் உடல் கல்லறைக் குகைகளில் அடக்கம் செய்யப்பட்ட போது என்ன குறிப்புகள் எழுதப்பட்டன?
2. புனிதர் பட்டம் கொடுக்கும் முறையை அறிமுகப்படுத்திய திருத்தந்தை யார்?
3. 1714ம் ஆண்டில் கோவைக் குருக்களில் ஒருவரான யாக்கோமோ கொன்சலஸ் பிரஞ்சுப் பதிதனோடு நடாத்திய விவாதம் எங்கே இடம் பெற்றது?
4. 'ஒரு யூபிலிதான் உண்டு' அந்த யூபிலி யாது?
5. கைப்பாசு என்ற பெயர் திருவிவிலிய புதிய மொழி பெயர்ப்பில் எவ்விதம் அழைக்கப்படுகிறது?
6. யாழ் நகரில் கத்தோலிக்க மகளிருக்கான முதற் கல்விக் கூடம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது?
7. வியட்நாமின் விசுவாச இரத்த சாட்சிகளுள் ஒருவர்?
8. திருச்சபையின் முதற் பாப்பு, புனித பேதுரு; இரண்டாவது பாப்பு யார்?
9. இந்தோனீசியாவின் தேசிய சின்னம் யாது?
10. 'ரேரும் நுவாரும்' (Rerum Nuvarum) என்ற சமூகத் திருமடலை வெளியிட்ட பாப்பரசர் யார்?

"தூமியும் தூளியும்"
வளன் ஆச்சிரமம்,
102, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஆனால் யுவான் படில்லா அங்கு நற்செய்தித்தா துரைப்பின் அவசியத்தை உணர்ந்து சில் துறவிகளுடன் குயிவிராவுக்குச் சென்றார். அங்கு விச்சிற்றா இந்தியர்கள் மத்தியில் நற்செய்திப் பணியில் பல மாதங்கள் உழைத்தார். ஒரு நாள் குவாஸ்ரிப் கிராமத்துக்கு சில துறவிகளுடன் சென்ற போது மறைந்திருந்த கொரில்லாக்களினால் தாக்கப்பட்டு இரத்த சாட்சியானார்.

## அடிமை வியாபாரச் சரக்குகளாக நீக்கிரோக்கள்

16ம் நூற்றாண்டிலிருந்து மத்திய 18ம் நூற்றாண்டு வரை ஸ்பானிய அரசுக்கும் ஒரு அமரிக்க அடிமை வர்த்தக நிறுவனத்துக்குமிடையே பெருமளவில் வியாபார ஒப்பந்தங்களும் விற்பனவுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன. இந்த நிறுவனம் 'அசென்ரிஸ்ரா' என அழைக்கப்பட்டது. இந்த நிறுவனம் நீக்ரோ அடிமை வர்த்தக உரிமைக்காக ஸ்பானிய அரசுக்கு ஆண்டுதோறும் பெருமளவு பணத்தை அளித்து வந்தது.

முதலில் 1517ல் ஜெனிவாக் கம்பனியொன்று வருடந்தோறும் 1000 ஆண், பெண் நீக்ரோக்களை அமரிக்க அடிமைச் சந்தைகளில் விற்பனைக்கு விட எட்டு வருட ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. 1528ல் ஒரு ஜேர்மனிய நிறுவனம் ஆண்டு தோறும் 4000 அடிமைகளை வழங்க ஏற்பாடுகளைச் செய்தது. இந்த நிறுவனம் 20.000 டுக்காற் நாணயங்களை வருடமொன்றுக்கு அரசுக்கு வழங்கியது. ஒரு அடிமையின் ஆகக் குறைந்த மதிப்பு 45 டுக்காற். அவனது, (அவளது) தோற்றம், தேகசுகம், உடல்வாளிப்பு என்பவற்றுக்கேற்ப மதிப்பீடு உயரும்.

18ம் நூற்றாண்டில் இந்த இலாபகரமான தொழிலில் ஸ்பானிய போர்த்துக்கீசிய, பிரான்சிய, பிரித்தானிய தனிப்பட்ட வியாபாரிகளும் கலந்து கொண்டனர். லட்சக்கணக்கில் லாபம் சம்பாதித்த இத் தொழிலில் போட்டியும் பொறாமையும், பூசல்களும் உருவாகி பல பிரச்சினைகளைக் கிளப்பியதால் அரச தலையீடும் அதிகமாகியது.

இவற்றில் மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தம் 1713ல் உற்ரிச் என்னுமிடத்தில் தென் பிரித்தானிய கடற்கம்பெனியுடன் செய்யப்பட்டதாகும். ஸ்பானிய அமரிக்க அரசுக்கு வருடமொன்றுக்கு 4800 அடிமைகள் வீதம் 30 வருடங்கட்கு கொடுக்கப்பட வேண்டியதாகும். அடிமைகளை ஏற்றியிறக்க விசேட கப்பல் வசதி செய்யப்படும். இந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டாலும் சரி, நிறுத்தப்பட்டாலும் சரி முதல் 4000 அடிமைகட்காக 34,000 பவுண்கள் செலுத்தவே வேண்டும்.





1998 செப்டம்பர் தேவதாயின் குரலில் தென் அமெரிக்க திருச்சபை வரலாறு, மெக்சிக்கோ காட்சிகளுடன் ஆரம்பமாகி இரு புனிதர்கள் உட்பட ஏழைகளின் சார்பாக நின்ற பல மிசனரிகளின் வரிசையில் இம்மாதம் தேகொஸ்ராவும், படில்லாவும் பற்றிய சில குறிப்புகள் இடம்பெறுகின்றன.

தென் அமரிக்காவின் முதல் மூன்று நூற்றாண்டுகள் திருச்சபை வரலாறு அமெரிந்திய சுதேசிகளை பெருந்தோட்ட முதலாளிகள் பாவிக்க முயன்று, அவர்களை நலிவுறச் செய்தனர். ஐரோப்பாவிலிருந்து வந்த புதிய நோய்கள் மக்களிடையேயும் ஐரோப்பியரோடும் நடந்த யுத்தங்கள் — மக்கள் தொகையைக் குறைத்தன. இதற்கு சில விதிவிலக்குகளும் இருந்தன.

இச் சுதேச மக்கள் தொகை குன்றவே, கிழக்கு மேற்கு ஆபிரிக்காவிலிருந்து பல நீக்ரோக்கள் அடிமைகளாக இத் தோட்டங்களில் வேலை செய்வதற்குக் கொண்டு வரப்பட்டனர். (கப்பல் வழியாக)

வடதென் அமரிக்காவுக்கு 1526 — 1810 இடையில் 10 மில்லியன் ஆபிரிக்க அடிமைகள் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் மத்தியில் சேவை புரிந்த அப்போஸ்தலர்கள் புனிதர்களான பீற்றர் கிலோவர், மாட்டீன் தேபோரஸ் முதலியோர்.

## பிரான்சிஸ்கோ டி விக்றோரியோ (தொடர்ச்சி)

சலமன்கா சர்வகலாசாலையில் விற்றோரியோ, புனித தோமஸ் அக்குவைனாசின் சிந்தனைகளை ஆய்வு செய்யும் பணியில் ஆர்வம் ஊட்டினார்.

போர் பற்றிய அவரது கருத்துக்கள் வருமாறு:– சமகாலப் போர்களின் பயங்கரங்களை வரையறுக்கும் பாதுகாப்புக்காக அல்லது பெரியதொரு தீமையைத் தவிர்க்கவே போர் தொடங்கலாம். போர் தொடங்குமுன் பேச்சுவார்த்தைகள், சமரச முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். போரினால் விளையும் நன்மைகளைவிட தீமைகளே அதிகமெனக் காணுமிடத்து அரசர்களோ, தலைவர்களோ போரைத் தொடங்கக் கூடாது. நிரபராதிகள் கொல்லப்படாதிருக்க ஆயுதம் தரித்தோரிடமிருந்து பொதுமக்கள் இனம் காணப்பட வேண்டும். ஒருவர் தன் மனச்சாட்சிக்கிணங்க போர் புரிய மறுப்பாராயின் அவரைக் கட்டாயப்படுத்தக் கூடாது.

விற்றோரியாவை திரிதெந்தின் பொதுச் சங்கத்துக்கு பிலிப் மன்னர் அழைத்த போது, தான் ஆண்டவரின் வீட்டுக்குப் போகவேண்டியிருக்கும் என மறுத்து விட்டார். அடுத்த வருடமே தமது 60 வது வயதில் யேசுபதம் அடைந்தார்.

## ஜோஸ் தே அக்கோஸ்ரா

இவர் ஸ்பெயின் நாட்டு மெடினா தெல்காம்ப்போ கிராமத்தில் 1539ல் பிறந்தார். புதிய உலகு எனப்படும் அமரிக்க நாடுகட்கு நற்செய்திப் பணியாற்றச் சென்ற அக்கொஸ்ரா இறையியல் கலாநிதியும் நூலாசிரியருமாவார். அமரிக்க நாடுகளின் அறியாமையைப் போக்கி ஐரோப்பிய நாகரீகத்தையும் மறுமலர்ச்சியையும் அங்கு புகுத்திய நவீன கலாச்சாரச் சிற்பிகளில் அக்கொஸ்ரா முதல்வராக கருதப்படுகிறார்.

1570 களில் நற்செய்தித் தூதுரைப்பாளனாக யேசுசபையில் இணைந்த இவர், 1571ல் பெரு நாட்டுக்கு அனுப்பப்பட்டார். அங்கு (1576 – 81) ஆறாண்டுகள் யேசுசபையின் மாகாணத் தலைவராக சிறப்புப் பணியாற்றிய பின் 1582ல் லீமா நகரில் இடம்பெற்ற மூன்றாவது இறையியல் மாநாட்டுக்குச் சென்று ஆலோசகராகப் பணி புரிந்தார். பின் சுதேச இந்திய மக்கள் பேசிய மொழிகளில் உபயோகிக்க, மறைக் கல்வி நூல்களை வகுப்புவாரியாக எழுதி உதவினார்.

1587ல் ஸ்பெயினுக்குச் சென்று "இந்திய சுதேசிகளின் இயற்கை வரலாறு" என்ற சிறந்த நூலொன்றை எழுதி வெளியிட்டார். இந்நூலுக்கு கிடைத்த அமோக வரவேற்பைத் தொடர்ந்து "இந்திய சுதேசிகளின் நீதி, அறநெறி வரலாறு" என்ற ஆய்வு நூலை பிரசுரித்தார். இந்நூல்களில் தென்னமரிக்க ஆதிச் சுதேசிகளின் வாழ்வு நெறி, நடையுடை பாவனை பற்றிய விரிவான, தெளிவான ஆய்வறிக்கையும், யேசுசபையின் நற்செய்தித் தூதுரைப்பாளர்களின் இன்னல் மிகுந்த பணியின் விரிவான விளக்கமும் தென்னமரிக்க நாடுகளின் அரசியல் பிரச்சினைகளும் நன்கு ஆராயப்பட்டிருந்தன. மேலும் மெக்சிக்கோ பெரு நாடுகளின் புவியியல் ஆய்வும் அங்கு தமது பதினாறு ஆண்டுகட்கு மேற்பட்டதான மதிப்பீடுகளும் அக்கொஸ்ராவின் இவ் வெளியீடுகளில் விபரமாக கணிப்பிடப்பட்டிருந்தன. எனவே தென்னமரிக்க நாடுகளின் அரசியல், வரலாறு, பண்பாடு, சுதேச நிலைமை, கல்வி, விஞ்ஞான புவியியல் நிலைகளின் ஆதிகால மதிப்பீடாக இந்நூல்கள் இன்றும் போற்றப்படுகின்றன.

அக்கொஸ்ரா, யேசுசபைப் பெருந் தலைவர் குளோடியா அக்குவிவாவுக்குக்கெதிராக ஐந்தாவது யேசுசபை மாநாட்டில்







குற்றஞ்சாட்டிய குழுவுக்கு தலைமை தாங்கினார். இக் குற்றச்சாட்டுக்கள் நிராகரிக்கப்படினும் அவர் (1592) சிறைவைக்கப்பட்டார்.

தமது நியாயமான கொள்கைகளை விளக்கி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 1594ல் விடுவிக்கப்பட்டார். உடனடியாக வல்லாடொலிற் பகுதியின் யேசுசபை சிரேஷ்டராகவும் 1598ல் சலமன்கா யேசுசபைக் கல்லூரியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டு, இப் பதவிகளில் 1600 பெப்ருவரி 15ல் இறைவனடி சேரும்வரை அயராதுழைத்தார்.

தென்னமரிக்க நாடுகளிடையே "நற்செய்தித் தூதுரைப்பின் பலாபலன்கள்" என்ற இவரது (1588) நூலும் ஐரோப்பிய நாடுகளில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற விரிவான ஆய்வுநூலாகும்.

## யுவான் படில்லா

இன்றைய ஐக்கிய அமரிக்க இராச்சியத்தின் பிரதேசத்தில் அன்று நற்செய்தித் தூதுரைப்பாளராகச் சென்று இரத்த சாட்சியான முதல் ஸ்பானியர் இவர்.

1500ல் பிறந்த யுவான் படில்லா முதலில் இராணுவ வீரனாக பணியாற்றிய பின் பிரான்சிஸ்கன் சபையின் அந்தலூசிய பிரதேச மடத்தில் துறவறம் பூண்டார். 1528ல் மெக்சிக்கோவின் ஸ்பானிய பகுதிக்கு சென்ற தேச ஆராய்ச்சியாளருடன் பயணம் செய்து வட மெக்சிக்கோவில் உள்ள நியூவா காலிசியா பகுதிக்குச் சென்று நற்செய்திப்பணியில் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டார்,

1533ல் தென் மெக்சிக்கோவில் உள்ள ரெகுன்ராபிக் பகுதிக்கு ஸ்பானிய ஆட்சியாளர் கேர்னன் கோர்டெஸ் என்பவருடன் சென்று அங்கு நற்செய்திப் பணியின் முன்னேற்றம் பற்றி ஒரு சிறிய ஆய்வை நடத்தி அறிக்கையும் சமர்ப்பித்தார்

சபொட்லான், ராம்சுவா, ருவான்ரிசிங்கோ பகுதிகளில் பிரான்சிஸ்கன் துறவறசபைகளை நிறுவி, அவற்றின் மடாதிபதியாகவும் பணியாற்றினார்.

1540 – 41 களில் ஸ்பானிய ஆய்வாளர், அரசப் பிரதிநிதியான பிரான்சிஸ்கோ வாஸ்குவெஸ் கொரநாடோவுடன் இன்றைய கன்சாஸ் பிரதேசத்தின் அன்றைய செல்வமிக்க பகுதியான குயிவிராவுக்கு சென்றார். ஆயின் தம் செல்வந்தேடும் முயற்சியில் தோல்வி கண்ட கொரநாடோவும் அவரது குழுவும் மெக்சிக்கோவுக்குத் திரும்பினர்.

# மருதமடுத் திருப்பதிக்காக உண்ணாநோன்புச் செபம்

பிதாவின் வீட்டை நோக்கிச் செல்லும் யாத்திரிகை அனுபவத்தில், கரடி, புலி, யானை வாழும் மருதமடு வனம் இத்தீவில் தெற்கிலும் வடக்கிலும் வாழும் கத்தோலிக்கருக்கு 16ம் நூற்றாண்டு தொட்டு புகலிடமாய் திகழ்ந்துள்ளது. ''யாழ் திருச்சபை வரலாற்றில்'' (பக். 75) குறிப்பிட்டது போன்று ஒரு திருத்தலத்துக்குத் தேவையான (வேண்டிய) அம்சங்கள் அனைத்தும் அங்கு ஒருங்கிணைந்து காணப்படுகிறது. (தீர்த்தம், மண், விருட்சம், கோவில், திருச்சொரூபம்)

செபம், தபம், பாவ மன்னிப்பு, பிராயச்சித்தம், இவற்றிற்கு சிறந்த தலம் மடு. தண்ணீர்த் தொட்டிகளும், பாவ சங்கீர்த்தனத் தொட்டிகளும், தமிழ், சிங்களம் என்ற பெயர்ப்பலகைகளோடு இம் மண்ணின் மக்களால் நிறைந்து வழியும். அங்கிருந்து வீடு செல்லும் மூலிகையும் மடு மண்ணும் கொண்ட பெட்டியே குடும்ப பொக்கிஷமாக வருத்த துன்பத்தில் - ஆபத்து அவசரங்களில் பயன்படும். (மடுப்பெட்டியை எடு என்பார்கள்)

நற்கருணை வைக்கப்பட்டிருக்கும் சின்னக் கோவிலில் குடும்பம் குடும்பமாக திரு மணித்தியாலமும், பெரிய கோவிலில் செபமாலை அன்னையின் முன் திருச்செபமாலையும் ஓதித் தியானித்து யேசு குருநாதரின் தெய்வீக விருந்திலும் திருப்பலியிலும் தினசரி பங்கு கொண்டு, இறுதிநாள் நற்கருணை ஆசிர்வாதமும், திருச்செரூப பவனியும் தெய்வீக அனுபவங்களாக பெற்று, கண்ணீர் மல்க பிரியாவிடைச் செபம் ஓதி, குரு ஒருவரின் திருக்கரத்தால் தீர்த்த ஆசியுடன் திருப்பதியிலிருந்து புறப்படுதல் கடந்த நான்கு நூற்றாண்டு காலத்தின் விசுவாச ஏணியான நிகழ்வுகள் அல்லவா?

இக்காலத்தின் புனிதத்தை பேணிக் காக்க, ஆயர் எமில் காலத்தில் நிர்வாகிகளான குருக்கள் (கொன்சலஸ், தேவராசா முதலியோர்) திருவிழாக் காலங்களில் இரவும் பகலும் அடிக்கடி எல்லா வீதிகளிலும் சுற்றி உலவி அனைத்தையும் அவதானித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தனர். அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டன.

போரும் அதன் அனர்த்தங்களும் இத் திருத்தலத்தை சீர்குலைத்து, அதன் புனிதத்துவத்தை அவசங்கைப்படுத்திய நிலையில் எத்தனை உள்ளங்கள் குமுறின. மடு, ஜெருசலேம் போன்று (காண்க - திருப்பா 122) அங்கு சென்றோர், தமதாக்கியோர் செய்த அவசங்கைச் செயல்கள், செபமாலை அன்னையின் பக்தர்கட்கு ஆத்திரமூட்டும் அனுபவமாயிற்று.

கொலை, கொள்ளை, குடிவெறி, காமம் முதலிய பஞ்சமாபாதகங்கள் அத்தனைக்கும் திருப்பதி இடமாயிற்று.

''அவர் என்னை நோக்கி, உள்ளே போய் அவர்கள் செய்யும் தீய அருவருப்பான செயல்களைப் பார் என்றார்...(எசேக்கியல் 8: 9, 10, 17, 18)

அதன் விளைவு? ஏப்பிரல் 99 நிகழ்வுகள்.

''நான் என் வீட்டைப் புறக்கணித்தேன், என் உரிமைச் சொத்தைத் தள்ளிவிட்டேன்... (எரேமியாஸ் 12: 7, 8, 9)

இதை உணர்ந்த மன்னார் ஆயர், மடுப் பகுதியின் புனிதத்தைப் பாதுகாக்க முதல் நடவடிக்கையாக குருக்கள், மக்கள் நோன்பிருந்து செபிக்குமாறு வேண்டுதல் விடுத்தார். அந்த வேண்டுகோளுக்கு இத் தீவின் கத்தோலிக்கர் அனைவரும் செவிசாய்த்தனர். உண்ணா நோன்புடன் இணைந்த செபத்தியானங்கள் பரலோக மட்டாய் எழுந்தன.

ஏப்பிரல் 18ல் யாழ் பேராலயத்தில் காலை 9 மணி முதல் பி. ப. 3 மணி வரை அறுநூறுக்குமதிகமான மக்களும், குருக்களும ஒன்று கூடினர். உண்ணா நோன்புப் பிரார்த்தனையில் தங்களை முற்றாக அர்ப்பணித்தனர். வண. பீலேந்திரன் அடிகளார் திருத்தலத்தின் வரலாற்றை எடுத்துரைக்க, வண. ரவிச்சந்திரன் அடிகள் மருதமடுவின் அடைக்கல நகர்த் தன்மையை விவிலிய அடிப்படையில் விபரித்தார்.

புனித சவேரியார் குருமட மாணவர்கள் பரிந்துரைச் செபங்களைச் செயதனர். இடையிடையே பாடப்பெற்ற பாடல்கள் உண்ணா நோன்புத் தியானத்தில் கலந்து கொண்டோரை ஊக்குவிக்கும் ஊக்கிகளாக அமைந்தன.

''மடுத் திருயாத்திரை ஈழத்தமிழ் மக்களின் தனித்துவமான அடையாளம். மடுத் திருச்சுரூபம், மடுப்பாடல், பிரியாவிடைச் செபம் புலம்பெயர்ந்த வேளையிலும் அந்தந்த நாடுகளில் (சுவிற்செலாந்து, இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து) யாழ் தமிழர்களால் அர்த்தம் காணுகிறது.

உண்ணா நோன்பு இறுதி நிகழ்வுகளை பி. பி. சி., அவுஸ்திரேலிய தொலைக்காட்சி சேவைகள் தத்தம் ஊடகங்களூடாக பதிவு செய்தன. சில அரசியல் குழுக்களும் மௌனமாக அவதானித்தன. எழுந்து செல்லத்தூண்டும் பல அச்சுறுத்தல்கள் மத்தியிலும் மாதாவுக்காகவும், மண்ணுக்காகவும் துணிவுடன் முன் நின்ற குருக்களையும் முன்வந்த மக்களையும் மெச்சி, இறைபுகழ் செலுத்த வேண்டும். இம் மண்ணில் விசுவாசம் வாழ்ந்துகொண்டுதானிருக்கிறது.

''ஏனெனில் கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும். உலகை வெல்லுவது நம்பிக்கை.

(1 யோவான் 5: 4)

தேவதாய் பாத்திமாவில் கேட்ட செபமாலை, ஒறுத்தல், உபவாசம் என்ற அழைப்பைக் கேட்டு பல கிராமங்களிலிருந்து வந்த இளைஞர், முதியோர், பிள்ளைகள், பெற்றோர் — தேவதாயின் குரலுக்கு செவிசாய்ப்பவர் பலர் இந்நாட்டிலுள்ளனர் என்பதை நிரூபித்துள்ளனர்.

திருச்சபையில் பாவிக்கப்படும் வெறும் பிரசார யுக்திகள், விழாக்கள், பணச் செலவுகள் நிறை ஆடம்பர நிகழ்வுகள், யூபிலி கொண்டாட்டங்களால் அதன் செலவுகள் காட்டும் வெள்ளை யானை அமைப்புகளால் திருச்சபை வளர்க்கப்படுவதில்லை.

மாறாக வரும் மிலேனியத்தில் அதன் அப்போஸ்தலர்களான இல்லறத்தோரும் துறவறத்தோரும் உயிருள்ளோரும் — வாழப்படும் விசுவாசத்தால் சாட்சி கூறப்படும் என்பதற்கு அன்றைய உபவாச செபத்தியானம் நல்லதொரு எடுத்துக்காட்டு.

குருட்டுப் பக்திகள் பரவுகின்றன. அர்த்தமற்ற பக்தி முயற்சிகள் நிரம்பி வழிகின்ற யாழ் மண்ணில் 1979 டிசம்பர் 10ல் பேராலயத்தில் மனித உரிமைகள் தினத்தில் Mirje நடத்திய உபவாச செபத்தின் பின்னர் மிக முக்கிய சமூக நீதிக்கான, நம் உரிமைக்கான முக்கிய குரல் 20 வருடங்கட்குப் பிறகு அதே இடத்தில் எழுப்பப்பட்டிருப்பது பெருமைப்பட வேண்டியதொன்று. அன்று அதே வேளை, நல்லூர் வீரகாளி அம்மன் கோவிலிலும், யாழ் முஸ்லிம் குடி

[7பக்கம் பார்க்க]

# மகிமையின் கீதம் குளோடின்

குளோடின் தேவநெற் 1774 மார்ச் 30ல் லியன் நகரில் பிறந்தாள். அடுத்தநாளே திருமுழுக்குப் பெற்று திருச்சபையின் உறுப்பினர் ஆனாள்.

ஏழு குழந்தைகளைக் கொண்ட இக் குடும்பத்தின் தலைவர் பிலிபேட் தேவநெற் ஒரு சிறு கடையை நடத்தி வந்தார். தந்தையாரிடமிருந்து ஏழைகளுக்கும் அனாதைகட்கும் இரங்கி உதவும் பண்பையும் தாயிடமிருந்து துணிவே துணை என்ற இலட்சியத்தையும் கற்றாள்.

ஒன்பதாவது வயதில் ஆசீர்வாதப்பர் துறவினிகளின் மேற்பார்வையில் பெற்றோரால் விடப்பட்டாள். அங்கு கல்வியுடன் விவித கலைப் பயிற்சிகளையும் தையல் முதலிய பெண்களின் அடிப்படைத் தேவைப் பயிற்சிகளையும் குளோடின் பெற்றுக்கொண்டாள். எனினும் 1789ல் அரசியற் புரட்சி ஆரம்பமாகி துறவற மடங்கள் முதலியன மூடப்பட்ட போது இச் சிறுமியும் பெற்றோரிடம் அனுப்பப்பட்டாள்.

அரசியற் புரட்சியின் பயங்கரங்கள் பரவத் தொடங்கின. தேவநெற் பெல்லி என்னுமிடத்தில் வசித்த தம் சகோதரியிடம் தம் சிறிய பிள்ளைகளை பாதுகாப்பு கருதி அனுப்பி விட்டார். பாரிஸ் நகரிலிருந்து அனுப்பப்பட்ட புரட்சிப் படைகள் லியன் நகரை 1793 ஓகஸ்ட் 9ல் கைப்பற்றின. வேலைக்குச் சென்ற தேவநெற் வீடு திரும்ப முடியவில்லை.

அவரது மூத்த புதல்வர்கள் லூயிஸ் அன்ரொயின் (20 வயது), பிராங்கொயிஸ் மாறி (18 வயது) தேசிய படையணியில் இணைந்தனர். புரட்சியின் வேகரம் அதிகரித்தது ஒருநாள் தனது மூத்த சகோதரர் இருவரும் வேறு பலருடன் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு வீதியால் இழுத்துச் செல்லப்படுவதை கண்டாள் குளோடின். (1794 ஜனவரி 5) அதிர்ச்சியுடன் தூரத்தில் அவர்களைப் பின் தொடர்ந்தாள், கல்வாரிப் பாதையில் தேவதாய் இயேசுவை பின் தொடர்ந்தது போல. ஒரு பகுதியில் கைதிகளின் ஊர்வலம் தாமதித்த போது மூத்த சகோதரனின் சமீபத்தில் குளோடினும் வேலைக்காரனும் சென்று விட்டனர். வேலைக்காரன் மூத்த சகோதரனின் சப்பாத்திலிருந்த கடிதத்தை யாருமறியாமலே எடுத்தான். சிறிது நேரத்தின் பின் தன் அன்பார்ந்த அண்ணன்மாரின் தலைகள் கில்லெட்டின் கத்தியந்திரத்தால் துண்டிக்கப்பட்டதைக் கண்ணீருடன் கண்டாள் குளோடின்.

அதிர்ச்சியுற்ற நிலையில் சில்லிட்டுப் போன கைகளால் அண்ணனின் இறுதிச் செய்தியைத் தாங்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வீடு சேர்ந்தாள். "உங்களை விட நாங்கள் பேறு பெற்றவர்கள். இரண்டொரு மணித்தியாலங்களின் பின் நாம் இறைவனடியில் இன்புற்றிருப்போம். அவரிடம் உங்களுக்காக இடைவிடாது செபிப்போம்" என்றது அந்த இளைஞனின் செய்தி.

குளோடின் தனது அண்ணனது இறுதி வார்த்தைகளை பெற்றோருக்கு அடிக்கடி கூறி அவர்களைத் தேற்றினாள். "அவர்களை மன்னித்து விடு. அவர்கள் அறியாமல் செய்கிறார்கள்' ஆம் இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த முதல் உரைதான் இது. 'தந்தையே இவர்களை மன்னியும் அறியாமல் செய்கிறார்கள்'

(லூக் 23:34)

யாவும் அமைதியுற்ற பின் அநியாயமாக கொல்லப்பட்டவர்களை கொடூரமாக வதைத்தவர்கள் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட்டு கொடூர தண்டனை விதிக்கப்பட்டனர். ஆயின் தேவநெற் குடும்பத்தினர் இயேசுவின் அன்புக் கட்டளையை (மத் 5 : 43 - 44) சிரமேற் தாங்கி கொலையாளிகளைக் காட்டிக் கொடுக்கவில்லை.

மூத்த சகோதரரின் திடீர் மரணத்தைத் தொடர்ந்து குளோடின் அன்பியல் பணிகளில் தன்னை முற்றாக அர்ப்பணித்து தனது உளத் தாக்கத்தை அகற்றினாள். புறானோ பங்கில் ஏழைகள் மத்தியில் அரும்பணியாற்றினாள். சிறார் கல்வி முதல் முதியோர் கல்வி ஈறாக, நோயாளர் பராமரிப்பு முதல் சேரிகளின் மாசகற்றும் அலுவல்கள் வரை ஓய்வொழிவின்றி உழைத்தாள்.

ஏழைகளின் முகமலர்வில் இறைவனைக் கண்ட இன்றைய அன்னை தெரசா ஆக, அன்று அவள் விளங்கினாள். இந்த உற்சாகப்பணிக்கு அவளுக்கு உந்துசக்தியாக விளங்கியது அவளது இடையறாத செபமே.

யேசுவின் திருவிருதயச் சபையின் அங்கத்தினராக அவள் பெற்ற பயிற்சியே இவ்வன்பியற் செயல்களில் அவளுக்கு கைகொடுத்தது. எங்கெங்கு கைவிடப்பட்டவர்களும் அநாதையாக அந்தரித்தவர்களும் பசி, பட்டினியாலும், பராமரிப்பு, புகலிடமின்மையாலும் வருந்தினார்களோ அவர்களெல்லாம் குளோடின் நடத்திய அறப்பணி நிலையங்கட்கே இறுதியாக ஓடிவந்து அரவணைக்கப்பட்டனர்.

1818 ஒக்ரோபர் 5ல் குளோடின் தன் அன்னையிடமிருந்தும் சகோதரரிடமிருந்தும் விடைபெற்றுத் தன்னை முற்றாக இறைபணியாம் மக்களின் சேவையில் ஈடுபடுத்தினாள். இதயங்கள் ஈட்டியால் காயப்படுத்தப்பட்டது போல இப் பிரியாவிடை அமைந்தது என குளோடின் பின்னர் கூறினாள்.

குளோடின் தன்னைப் போல் அன்பியற் செயல்களில் — ஏழைகள் அநாதைகளின் பணியில் தம்மை முற்றிலும் அர்ப்பணித்த கன்னியர்களுடன் திருஇருதய துறவினிகள் சபையை நிறுவினாள். அச் சபையின் முதல் தலைவியாக "மரியா இக்னேசியா அன்னை" என்ற பெயரால் அழைக்கப்பட்டாள்.

ஓய்வொழிவின்றி அன்புப் பணிகளில் ஈடுபட்டதால் நோயினால் தாக்குண்ட இயேசுவின் இவ்வன்புச் சகோதரிக்கு 1837 ஜனவரி 29ல் இறுதி அருட்சாதனங்கள் „ வழங்கப்பட்டன. இறைவன் எவ்வளவு நல்லவர் என்று கூறிக்கொண்டே இரு தினங்களின் பின் இறைவனடி சேர்ந்தாள் குளோடின்.

1993 மார்ச் 21ல் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், குளோடின் தேவநெற் என்ற லியன் நகர துறவினியை புனிதர் ஆக பிரகடனம் செய்தார். இப்புனிதை ஒரு "மகிமையின் கீதம்" எனவும் புகழ்ந்துரைத்தார்.

இறைவனில் கொண்ட அளவற்ற பேரன்பினால் அவரது படைப்புகளான ஏழைகள், அநாதைகள், அந்தரித்தோர், அகதிகளின் நலன்கட்காக தன் வாழ்நாள் முழுவதும் அயராதுழைத்த குளோடின் தேவநெற் எமக்கு ஒரு சிறந்த வழிகாட்டி.

# தேவதாயின் அற்புத வரலாறு [தொடர்ச்சி]

இன்னும் சிலரெழும்பி உலக இரட்சகர் உண்டாக்கிய தேவதிரவிய அனுமானங்களை மனிதர் பெறாமல் இருக்கவும் அப்படிப் பெற்றாலும் பக்தியில்லாமல் சாவான பாவத்தோடு பெறவும் செய்வோம். ஏனென்றால் இப்படிச் செய்தால் உலக இரட்சகர் மேல் அன்பு வைக்காமல் அவருடைய ஞானத் திரவியங்களுக்கும் அவர் தாயின் வேண்டுதலுக்கும் பங்காளியாகாமற் போவார்கள். மேலும் உலக இரட்சகருடைய வியாகுலம் பொருந்திய பாடுகளை மனிதருடைய ஞாபகத்திலிருந்து எடுத்துவிட்டால் நித்திய நரக வேதனையை அவர்கள் மறந்து போவார்களென்றார்கள்.

திருச்சபையில் கலகம் உண்டாக்கி கிறிஸ்தவர்களுடைய ஆத்துமாக்களைக் கெடுக்க பசாசுக்கள் நரகத்திலே ஒரு வருட காலமாக ஆலோசனைச் சங்கம் கூடியிருந்தபடியினாலே அதில் தீர்மானம் செய்த தந்திர உபாயங்களை இவ்விடத்தில் சொல்லி முடியுமா? லூசிப்பேய் வெறிகொண்ட மற்றப் பேய்களுடைய ஆலோசனைகளெல்லாம் கேட்டு திருச்சபைக்கு கலகத்தை மூட்டவும் சனங்களுக்குள்ளே தந்திரத்தை எழுப்பவும் அதிக ஆத்திரத்துடன் அவர்களை உலகிற்கு அனுப்பியது. லூசிப்பேய் எப்போதும் பலவீனங்கொண்ட மனிதர்களைக் கெடுக்க அனேகம் கூட்டம் பசாசுக்களை இடைவிடாமல் ஏவிக்கொண்டேயிருக்கிறது.

## யேசுவின் திருவுடலை அடக்கம் செய்த வரலாறு

வியாகுல மாதா கறுப்புத் துப்பட்டியால் முக்காடிட்டுக்கொண்டு சிலுவையைக் கட்டிக் கொண்டு மரித்த யேசுநாதருடைய திருச் சரீரத்தையும் அதில் ஐக்கியமாயிருந்த தெய்வீகத்தையும் நின்ற நிலையில் வணங்கிக் கொண்டிருந்தாள். உலக இரட்சகர் கொடுக்க வந்த இரட்சணியத்தின் உபகாரத்திற்கு கெட்டவர்கள் இப்படி நன்றி கெட்டவர்களாக இருந்தபடியினாலே தேவமாதா விரதத்துவத்திற்குரிய புண்ணியங்களைச் செய்து கொண்டு வியாகுலச் சமுத்திரத்திலே அமிழ்ந்தியிருந்தாள். இப்படி இருக்கும் போது திடீரென்று பெருந்திரளான சனக்கும்பல் வந்தது. அதைக் கண்டு இவள் யேசுநாதரைக் கொன்றது போதாமல் ஏதோ அவமானம் செய்ய வருகிறார்களென்று நினைத்த போது அவள் இருதயம் பதறியது. அது வெள்ளிக்கிழமை சாயந்திரமாயிருந்தபடியினாலேயும் மறுநாள் ஓய்வு நாள் பெரிய திருநாளையவர்கள் கொண்டாடப்போகிறபடியினாலேயும் வழக்கம் போல சிலுவையில் அறையப்பட்டவர்களுடைய முழங்கால்களை முறித்தார்கள். யேசுநாதருடைய முழங்காலை முறிக்கவில்லை. ஆனால் கண் பழுதுள்ள லோஞ்சனென்பவன் அவருடைய திருவிலாவில் ஈட்டியினால் குத்தின போது அதினின்று இரத்தமும் நீரும் வெளிவந்தன.

யேசுநாதர் மரித்துப் போயிருந்தபடியினாலே இந்தக் குத்தினால் அவருக்கு நோ இருக்கவில்லை. ஆனால் தேவமாதா ஈட்டியினால் குத்தப்பட்டது போல நோவடைந்தாள். இவள் இந்த லோஞ்சனுக்காக வேண்டிக் கொண்டபடியினாலே இவன் கண்ணிற்பட்ட இரத்தத் துளிகளினாலே இவன் கண் குணமடைந்ததுமன்றி இவனும் மனம் திரும்பி பாவத்திற்காக அழுது உலக இரட்சகருடைய தெய்வீகத்தைக் கண்டு விசுவசித்து அருகே இருந்தவர்களுக்கு இவரே மெய்யான தெய்வமென்று பிரசங்கம் பண்ணினான். ஈட்டிக் குத்தினால் புறப்பட்ட இரத்தத் தண்ணீரால் புது திருச்சபை கழுவப்பட்டு உலக இரட்சகருடைய பாடுகளினால் புதுப்பிக்கப்பட்டதுமன்றி உலக இரட்சகருடைய திரு இருதயத்திலிருந்து நித்திய சீவியத்தினுடைய நீர் தங்கிய கொடிகளுடைய பரமவிரகசியம் என்று தேவமாதா தேவ ஏவுதலால் கண்டு பிடித்தாள். ஆகையால் இரட்சணியத்தினுடைய சகல பரம இரகசியங்களும் பரிபூரணமாய் நிறைவேறும்படி வேண்டிக் கொண்டாள். அவ்வேளையில் அரிமத்தி சூசையும் நிக்கோதேமும் அவருடைய ஊழியக்காரரும் ஏணிகளை எடுத்துக் கொண்டு வந்தார்கள். மரித்த யேசுநாதரைப் பார்த்து தேவமாதாவுக்கு மரியாதை செய்ய மறந்து உயிரற்றவர்களைப் போலிருந்தார்கள். தேவமாதா அவர்களைத் திடப்படுத்தினதால் ஆணிகளைக் கழற்றி யேசுவினுடைய திருச் சரீரத்தைக் கீழே இறக்க முயன்றார்கள். தேவமாதாவினுடைய வியாகுலம் மிகவும் அதிகமாகுமென்று சூசை நினைத்து தேவமாதாவைக் கொஞ்சத் தூரம் போகும்படி கேட்டுக் கொண்டார். அதற்குத் தேவமாதா என் திருக்குமாரன் சிலுவையிலறையப்பட்டதைப் பார்த்தேன்; அவர் திருச்சரீரத்தை இறக்கும் போது பார்ப்பதில் எனக்கு பலம் குறையுமா என்றார்.

இதைக் கேட்டு அவர்கள் ஏணியின் மேல் ஏறி முள்முடியைக் கழற்றி அதை முத்தி செய்து தேவமாதாவிடம் கொடுத்தார்கள். அவள் முழங்காலிலிருந்து அதை வணங்கி கைகளிலேந்தி முத்தி செய்து கண்ணீர் விட்டு அழுதாள். அர்ச். அருளப்பரும் மற்றப் பரிசுத்த பெண்களும் முள்முடியைவணங்கினார்கள். ஆணிகளுக்கும் இவ்விதமான மரியாதையைச் செய்தார்கள். அவருடைய திருச்.சரீரத்தை இறக்கும் போது தேவமாதா முழங்காலிலிருந்து ஓர் துணியை கையில் விரித்துக்கொண்டிருந்தாள். நிக்கோதேமும், சூசையும் அவர் திருச்சரீரத்தை இறக்கும் போது அருளப்பர் திருச்சிரசையும் மதலேனாள் பாதங்களையும் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அதை இறக்கித் தேவதாயின் மடியில் வைக்கும் போது அவள் இரத்தக் கண்ணீர் விட்டழுதாள். (வளரும்)

---

## மருந்மடுந்..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பு பெரிய பள்ளிவாசலிலும் உபவாச பிரார்த்தனைகள் நடைபெற்று பின் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கெதிராக ஒன்றுபட்ட குரல் எழுப்பட்டது.

அன்று யாழ் பேராலயத்தில் வண. போல் கஸ்பர்ஸ், பேராசிரியர் றெஜி சிரிவர்த்தனா ஆகியோர் இன்று தொங்கிக் கொண்டிருக்கும் அதே சிலுவை நாதரின் முன்தான் பேசினர். இன்றும் அதே சிலுவையின் முன்தான் உபவாசம் இருந்தோம். தொடர்ந்தும் இருப்போம்.

3ம் மிலேனியத்தின் மனித மாண்புச் சிதைவுகள் குறைந்து விடப் போவதில்லை. மாறாக பெருகக் கூடும்.

"சிலுவையில் உலக முடிவுவரை தொங்கும் யேசு" அண்ணாந்து பார்த்து நல்ல கள்வனைப் போல் சான்றுபகர, சிலராவது இருந்து கொண்டுதானிருப்பர். ◆

# முகமற்ற மூன்றாம் உலக மனிதர்கள் (தொடர்ச்சி)

## மூன்றாம் உலகக் கண்ணோட்டத்தில் சமூகக் கோட்பாடுகள் பற்றிய ஒரு வாசிப்பு

மூன்றாம் உலகம் உருவாகக் காரணமான வரலாற்றை நாம் மாற்ற முடியாது. ஆனால் இந்த வரலாற்று தெளிவு இல்லாவிடத்து மூன்றாம் உலகை மாற்ற முடியாது. அந்த எண்ணக் கருவின் பலம் அதுதான், என்று காட்ஜோர் மூன்றாம் உலக சொற்பதங்களின் அகராதியின் முன்னுரையில் குறிம்பிட்டுள்ளார். மூன்றாம் உலக நாடுகளை புவியியல் ரீதியில் வரையறை செய்வதை விடுத்து அரசியல் ரீதியாக வரையறை செய்யும் பொழுது காலணித்துவ ஆட்சியமைப்பியல் வரலாற்றுப் பின்னணியை அதன் முக்கிய அம்சமாக முன்வைப்பதை அவதானிக்கலாம். காலனித்துவ ரீதியான வரையறையினை முன்வைக்கும் பொழுது குடியேற்றவாத பின்னணியில் இந்த வரையறை கேள்விக்குரியதே.

### ஒடுக்கு முறையின் இயந்திரத்தனம்

முதலாளித்துவ கைத்தொழில் நாடுகளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்குமிடையில் உள்ள பொருளாதார ரீதியான உறவில் மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டாகவேண்டும்.

1. உற்பத்தியின் மூலப் பொருட்களையும், சக்தியின் மூல தனங்களையும் வழங்கல்.

2. சந்தைப்படுத்தலைத் திறத்தல்.

3. இன்றைய உற்பத்தியை பாதிக்கும் புதுவகையான சர்வதேச வேலை பகுப்பு.

இம்மூன்று அம்சங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை மட்டுமல்ல வளர்ச்சியுற்ற நாடுகளின் மேலதிக சேமிப்புக்கும் உயர்மட்ட இலாபத்துக்குமான காரணமாகும்

மிகவும் அதிக அளவிலான மூலப் பொருட்களும் அடித்தள பொருட்களும், இருந்த தவிர்ந்த உற்பத்திகளுக்கு மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வட பிராந்திய முதலாளித்துவ நாடுகளுக்குக் கிடைப்பதோடு மிகவும் இலகுவாகவும் மலிவாகவும் நிரம்பலை உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது விலையை நிர்ணயிக்கும் போது உற்பத்தி செய்வோரின் பல வேறுபட்ட காரணங்களால் சமமற்ற உறவு முறை பேணப்படுகிறது. சர்வதேச வர்த்தக அமைப்புகளுடன் உள்ளூர் வர்த்தக உற்பத்திகள் இணைக்கப்பட்டது. கோப்பி, கொக்கோ, தேயிலை, வாழைப்பழம் போன்றவை மலிவான விலையில் மூன்றாம் உலக நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதியாக்கப்படுகின்றது. இவைகள் அங்குள் காலநிலைக்கும் சம்பள உயர் திறனுக்கும் மலிவாக உற்பத்தி செய்ய முடியாது.

### மூன்றாம் உலகத்தனம்

மூன்றாம் உலகம் என்ற சொற்பதம் முன்வைக்கப்பட்டு கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் ஆகிறது. மற்றைய சொற்பதங்கள் பலவற்றைப் போல் கால ஓட்டத்தில் அழிந்து போகவில்லை. கால ஓட்டத்தில் பலப்பல புது அர்த்தங்களை உள் வாங்கியுள்ளது. இறையியல் அம்சமாக வரலாற்றின் ஒடுக்கப்பட்டவர்வர்களாக அர்த்தம் பெறுகிறது அண்மையில் நடந்த ஆயர் சங்கத்தில் மூன்றாம் உலக ஆயர்களின் குரலானது துன்பப்படும் அம் மக்களின் விடிவுக்கான தனித்துவமிக்க குரலாகும் என்ற ரீதியில் மூன்றாம் உலகம் என்ற சொற்பதம் முதன் முதலில் திருத்தந்தை 6ம் பாவிலுவின் நற்செய்தி அறிவிப்பு என்ற மடலில் எடுத்தாளப்பட்டது. மேலும் மூன்றாம் உலகம் என்ற இச் சொல்லானது அதன் முழு அர்த்தத்தோடு 2ம் யுவான் பாவிலு 1987 ல் வெளியிட்ட திருச்சபையில் சமூக ஈடுபாடு என்ற சமூகக் கோட்பாட்டு மடலில் கோடிட்டுக் காட்டியுள்ளார். தொழிலாளர் நிலமை என்று சமூகக் கோட்பாட்டு மடலின் 100 வது ஆண்டில் 1991 ல் 2ம் யுவான் பாவிலு வெளியிட்ட நூறாவது ஆண்டு என்ற சமூகக் கோட்பாட்டு மடலில் மூன்றாம் உலகம் என்பதை புவியியல் வரையறையாக கருதுவது தவறாகும் என எச்சரிப்பதோடு மூன்றாம் உலகத்தனம் வளர்ச்சியடைந்த நாடுகளில் இருப்பதை அவதானிக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்.

---

**தந்தையிடம்..**

( 1ம் பக்கத் தொடர் )

''வறுமை நிறை நாட்டின் ஓரங்களில் இருந்து வாழ்வின் செழிப்பான இடங்களைத் தேடிச் செல்லும் யாத்திரிகர்கள்''

''தூரத்தே எம் பிதாவின் வீட்டின் பச்சைநிற சிங்கார தோட்டத்தைக் கண்டு அங்குள்ள அன்பின் மூலிகையைப் பெற, பிச்சை கேட்போராக புறப்பட்டோர்''

''பன்றிக்கூடு போன்று மாறிவரும் சீர்கெட்ட உலகின் அருவருக்கும் நிலையை விட்டு பிதாவின் மாளிகையின் சங்கீத கானம் கேட்டு திசை திரும்பி நடப்போர்''

இவர்கட்கு ஏழ்மை – தூய்மை – தாழ்மை அவசியம். ♦

**தூயியும்..**

(2ம் பக்கத் தொடர்)

♦ ஊனக் கண்களால் நோக்கும் தோறும் ஞானக் கண்களில் கருணையையும் செயலையும் தியானிக்க அருள்கூரும் என்றுபுனிதர்களின் சுருபங்கள் ஆசிர்வதிக்கும் போது சொல்லப்படுவது சுருபங்களில் புனிதரின் அடையாளத்தை நினைவூட்டுவதோடு வரலாற்றில் தொடர்புடைய அடையாளங்களும் காணப்படும். பேதுரு – தலைகீழான சிலுவை, பாவிலு – வாள், செபஸ்தியார் – உரோமை செந்தூரியனின் தொப்பி, அந்தோனியார் – திருப்பாலனும் போதனையின் அடையாளமான வேதாகமமும், யாகப்பர் – ஸ்பானிய பாரம்பரியத்தின்படி குதிரை, பிலிப்பு நேரி – சேவல், தோமா – ஈட்டி

♦ இயேசு சபையைச் சேர்ந்த கென்றி கென்றிகஸ் புனிதர்களின் சரிதையை 1586 ல் வெளியிட்டார். இந்நூலே ஆரம்பத்தில் கத்தோலிக்க நாட்டுக் கூத்துகளின் உரு கருவாக அமைந்தது. ♦

---

13ம் திகதிகளில் 2-30 தொடக்கம் 4-30 வரை மௌன விரதச் செப வழிபாடு இடம் பெறும்.

---

Print; "ANNAI PRINTERS"
Jaffna,

Published by: PAXCHRISTI
St. JOSEPHS ASARAM,
102, Main Street, Jaffna.

விலை ரூபா 2.00